Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 13

செவ்வாய்க்கிழமை
09 டிசெம்பர் 2025

கார்த்திகை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

ஊர்காவற்றுறை பிரதேசசபை;

## பட்ஜெட் மீண்டும் தோல்வி

யாழ்ப்பாணம், டிசெ. 9
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.
ஊர்காவற்துறை பிரதேச சபையின் பட்ஜெட் கடந்த »11

அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக

# யாழ். மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராடுவோம்!!

யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 9**
**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் வாசலை முடக்கிப் போராட்டம் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.** »11



## பதில் பிரதம நீதியரசராக யசந்த கோத்தகொட!

கொழும்பு, டிசெ. 9
பதில் பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற நீதிபதி யசந்த கோத்தகொட நியமனம் செய்யப்பட்டுள்ளார். »11

## இந்தியா – சீனாவின் தலைமையில் சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

கம்மன்பில பரிந்துரைப்பு

கொழும்பு, டிசெ. 9
இந்தியா, சீனா நாடுகளின் இணைத்தலைமையின் கீழ் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில பரிந்துரைத்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப் »11



## நிவாரணப் பொருள்களுடன் யாழில் அமெரிக்க விமானம்

யாழ்ப்பாணம், டிசெ. 9
பேரிடரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் அமெரிக்க விமானமொன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத் »11

## 25,000 ரூபா கொடுப்பனவு எமது பகுதிக்குத் தேவையில்லை!

அப்படியான அழிவுகளும் ஏற்படவில்லை
நல்லூர் கிராம அலுவலர்கள் முன்மாதிரி

யாழ்ப்பாணம், டிசெ. 9
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 16 கிராம அலுவலர்கள் இணைந்து, தமது பகுதிக்கு 25 ஆயிரம் ரூபா உதவித்தொகை தேவையில்லை என பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.
ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/102, ஜே/103, ஜே/104 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களே இந்தக் கடிதத்தை கூட்டாக அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-
டித்வா புயல் மற்றும் வெள்ளத்தால் எமது »11

## யாழில் பொதுவிடத்தில்குப்பைகொட்டிய மாநகரசபை உறுப்பினரை மடக்கிப் பிடித்த மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணம் - மாநகரசபை உறுப்பினர் ஒருவர், பொதுவிடத்தில் குப்பை கொட்டிய நிலையில், பொதுமக்களால் கையும் களவுமா »11

## கடலட்டைப் பண்ணைகளில் பெரும் பொருளாதார அழிவு!

இழப்பீடு வழங்குமாறு
பண்ணையாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 8
டித்வா புயல் மற்றும் வெள்ளப் பேரிடர் காரணமாக தமக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று »11

## மீன்பிடிக்கச் சென்றவர் குளத்தில் மூழ்கிச் சாவு

மாதகலில் துயரம்

விரிவு
பக்கம்:-11

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிடுபவர்களில் மூவரைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவைக் கூட்டம் யாழ்ப் »11



## உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்குமாறு போராட்டம்!

மாவட்டச் செயலரிடம்
நேற்று மனுவும் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேண்டுமெனக்கோரி நேற்றுப் போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கை அமைக்கும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட் »11

முச்சந்தி முராளி

'பாலுக்கு பூனைய காவலுக்கு வைச்சா கடைசியில இப்பிடித்தான் நடக்கும் கண்டியளோ...!'

துணைவேந்தர் தெரிவில்

## நேர்மையுடன் செயற்படுங்கள்: நீதியாகப் புள்ளியிடுங்கள்

பேரவை உறுப்பினர்களுக்கு ஆணைக்குழு அறிவுறுத்தல்


கொழும்பு, டிசெ. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவுக்கான யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டத்தின் போது, தகுதி, திறமையின் அடிப்படையில் உறுப்பினர்கள் இதய சுத்தியுடன் நேர்மையாகப் புள்ளிகளை வழங்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைவேந்தர் தெரிவு »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதக் கட்டுமானங்களுக்கு இனிமேல் இடமளிக்கமாட்டோம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ.9**
**எதிர்காலத்தில் அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமளிக்கப்படாது. அதற்கான சட்டங்கள் வலுப் படுத்தப்படும். அதைச் செய்யத் தவறினால் நாடு மிகப்பெரிய பேரழிவை எதிர்கொள்ள வேண்டியி ருக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.**

குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். தற்போது உரு வாக்கப்படவுள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி செய லணியின்கீழ் சட்டம் தொடர் பான கொள்கைகளை வகுப்ப தற்கான தனிப்பிரிவு ஒன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். அதன்கீழ் இந்தப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகளைக் காண முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்த மாதத்தில் மட்டும் 25 ஆயிரம் சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ.9
இந்த மாதத்தின் முதல் நான்கு நாள்களில் 25 ஆயிரத்து 46 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இந்தக் காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து அதிகபட்சமாக 4 ஆயிரத்து 389 சுற்றுலாவி கள் வந்துள்ளனர். ஜேர்மனியிலிருந்து 3 ஆயிரத்து 421 சுற்றுலாவிகளும், ரஷ்யாவி லிந்து 2 ஆயிரத்து 882 சுற்றுலாவிகளும், பிரிட்டனில் இருந்து ஆயிரத்து 559 சுற்றுலாவி களும், அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 160 சுற்றுலாவிகளும், சீனாவிலிருந்து ஆயி ரத்து 327 சுற்றுலாவிகளும், போலந்திலி ருந்து 975 சுற்றுலாவிகளும் வந்துள்ளனர்.
அதேவேளை, இந்த ஆண்டின் ஜனவரி முத லாம் திகதியில் இருந்து டிசெம்பர் 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 21 இலட்சத்து 28 ஆயிரத்து 639 சுற்றுலாப்பயணிகள் நாட் டுக்கு வந்துள்ளனர். (எ-இ)

## இறால் பண்ணைகளும் இயற்கை இடரால் அழிவு

புத்தளம் , டிசெ.9
அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் புத்த ளம் மாவட்டத்தில் மட்டும் 600க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் அழிந்துள்ளன என்று தெரிவிக்கப்ப டுகின்றது. பாதிக்கப்பட்ட இறால் பண்ணை யாளர்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெ ழுப்ப அரசாங்கம் உதவும் என்று கடற்றொழில அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கண்டி மாவட்டத்தில் மட்டும் 35 மாணவர்கள் உயிரிழப்பு!

கண்டி, டிசெ.9
வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக கண்டி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் 35 பேரும், ஆசிரியர்கள் 10 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அழ கக்கோன் தெரிவித்துள்ளார்.
காணாமற்போயுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரி யர்களின் எண்ணிக்கை இன்னும் உறுதிப்படுத்தப் படாதநிலையில், கண்டி மாவட்டத்தில் 97 ஆயிரத்து 850 பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள னர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட் டுள்ளநிலையில், பாடசாலைகள்திறக்கப்படும்போது அவர்கள் அருகில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## சீரற்ற வானிலை காரணமாக 1000 பாடசாலைகள் பாதிப்பு!

கொழும்பு, டிசெ.9
சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 9 மாகாணங்களிலும் சுமார் 1000 பாடசாலைகள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக் குள்ளாகியுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ தெரிவித் துள்ளார்.
பாடசாலை செல்லும் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் இந்த இயற்கைப் பேரிடரால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள் ளனர் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.
இடரால் கடுமையாகப் பாதிக்கப் படாத பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை எதிர்வரும் 16ஆம் திகதி திறப்பதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.
எந்தப் பிரதேசத்தில் எந்தப் பாட சாலை திறக்கப்படும் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு இரண்டொரு நாளில் வெளியி டப்படும்.
பாடசாலைகளைத் திறப்பது டன், க.பொ.த. உயர்தரப் பரீட் சையில் நடத்தப்படாத வினாத் தாள்களை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு தற் போது முயற்சிகள் எடுக்கப்பட் டுள்ளதென்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை | 0745 |
| DLB | ஆங்கில எழுத்து: C | வெற்றி இலக்கம்: 0 3 1 8 2 5 | |

| Super Ball (DLB) | திகதி | தினம் |
|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம்: 3011 | ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கம்: 04 12 17 52 |

| சனிதா (DLB) | திகதி | தினம் |
|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து: Y | வெற்றி இலக்கம்: 05 15 43 60 | வெற்றி வாரம்: 5172 |

| SASIRI (DLB) | திகதி | தினம் |
|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம்: 0841 | வெற்றி இலக்கம்: 03 18 46 | |

| லக்ன ராசி | திகதி | தினம் |
|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை |
| கடகம் | வெற்றி இலக்கம்: 10 30 44 49 | சீட்டிழுப்பு வாரம்: 4723 |

| KAPRUKA (DLB) | திகதி | தினம் | |
|---|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து: E | சுப்பர் இலக்கம்: 01 | வெற்றி இலக்கம்: 63 68 69 71 | வெற்றி வாரம்: 2187 |

| அத கோடிபதி (DLB) | திகதி | தினம் |
|---|---|---|
| | 08.12.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து: I | வெற்றி இலக்கம்: 18 21 40 44 | வெற்றி வாரம்: 2837 |



## இயற்கைப் பேரிடரால் பேராதனைப் பல்கலைக்கு 5 பில். ரூபாவரை இழப்பு!

கொழும்பு, டிசெ.9
அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் பேராத னைப் பல்கலைக்கழகத்துக்கு 3 பில்லியன் முதல் 5 பில்லியன் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளது என்று பல் கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.
கொத்மலை நீர்த்தேக்கம் திறந்துவிடப்பட்டதை அடுத்து முகாமைத்துவபீடம், விவசாயபீடம், கால்நடை மருத்துவ பீடம், உள்ளக விளையாட்டரங்கம், பல்கலைக்கழக கணினி நிலையம், தொலைநிலை மற்றும் தொடர்ச்சிக் கல்வி நிலையம், நிர்வாகப் பகுதி, சமூக விஞ்ஞான முது கலை நிறுவனம், பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திர திறந்த வெளி அரங்கம் மற்றும் சரஸவி மந்துர மாணவர் விடுதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கின. கல்வி மற்றும் ஆராய்ச் சிகளுக்காகப் பயன்படுத்தப்படும் பல அதிநவீன உபகர ணங்கள் பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வதந்திகள் பரவுவதைத் தடுக்கவே அவசரகாலச் சட்டம் நடைமுறை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, டிசெ.9
அவசரகாலச் சட்டம் தவறான தகவல்கள் பரப்புவதைத் தடுப்பதை மட்டுமே நோக்கம் கொண்டது. இது அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பொது நலன்புரி முயற்சிகள் மற்றும் நடந்து வரும் நிவாரண நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தவறான தகவல்களைப் பரப்பி அச்சத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சட்டங்கள், பீதியை உண்டாக்க தகவல்தொடர்புத் தளங்களைத் தவறாகப் பயன்படுத்துபவர்களை மட்டுமே இலக்குவைக்கின்றன-என்றார். (எ-இ)



## இடருக்குள்ளான இடங்களை பார்வையிட வரவேண்டாம்

### இடர் முகாமைத்துவ நிலையம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.9
இயற்கை அனர்த்தத்துக்கு உள்ளான இடங்களைப் பார்ப்பதற்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அது மிகவும் ஆபத்தானது என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி வேண்டுகோள் விடுத்துள்ளார். வெள்ளநீர் மிகவும் வேகமான நீரோட்டத்துடன் பாய்கின்றது என்றும், அதனால் நீரில் குளிப்பதையும், களியாட்டங்களில் ஈடுபடுவதையும் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதிக மழையுடனான காலநிலையால் மண் அதிக நீர்ச்செறிவுடன் உள்ளது. அதனால் அவதானமாகச் செயற்படவேண்டும். சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக அங்கிருந்து வெளியேற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)

## சேதமடைந்த ரயில் பாதை சீரமைப்பு

கொழும்பு,டிசெ.9
சீரற்ற காலநிலையால் சேதமடைந்த, கொழும்பு-புத்தளம் ரயில் பாதையில், குடா ஓயா மற்றும் நாத்தாண்டியா இடையேயான ரயில் பாதை அவசரமாகச் சீரமைக்கப்பட்டு வருகின்றது. வலஹாபிட்டி உப நிலையத்திலிருந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பழைய ரயில் இரும்புப் பாலத்துடன் இணைக்கப்பட்ட நிலப் பரப்பு வெள்ளத்தால் அழிவடைந்தது. இதனை சிலாபம் போலவத்தை ரயில் பராமரிப்புப் பிரிவு மற்றும் கடற்படையினர் இணைந்து சீரமைத்து வருகின்றனர். (க-இ)

மார்க்க සංවර්ධන අධිකාරිය
Road Development Authority
வீதி அபிவிருத்தி அதிகார சபை

## கொழும்பு-கண்டி வீதி திறப்பு

கொழும்பு டிசெ.9
கொழும்பு-கண்டி வீதியின் கணேதென்ன மற்றும் கடுகண்ணாவ இடையிலான வீதி வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக நேற்று முதல் முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அண்மையில் ஏற்பட்ட இடர் நிலைமை காரணமாகச் சேதமடைந்த 256 பிரதான வீதிகளில் 219 வீதிகள் தற்போது வாகனப் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பாலங்களைச் சீரமைப்பதற்கு ஒன்றரை ஆண்டுகள் தேவை

கொழும்பு, டிசெ.9
இயற்கைப் பேரிடரால் கடுமையாகப் பாதிப்படைந்த பிரதான பாலங்களைச் சீரமைப்பதற்குக் குறைந்தது ஒன்றரை ஆண்டுகள் ஆகும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 'ஏ' மற்றும் 'பி' தர வீதிகள் மூன்று மாதங்களுக்குள் சீரமைக்கப்படும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## கால்வாய்களைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் துரிதகதியில்

கொழும்பு, டிசெ9
இயற்கைப் பேரிடரால் சேதமடைந்துள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களை விரைவாக முன்னைய நிலைமைக்குக் கொண்டுவந்து, வயல்கள் மற்றும் பயிர்நிலங்களுக்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சேதமடைந்த பகுதிகளைத் தற்காலிகமாகவேனும் சீரமைத்து நீரை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட நெல் வயல்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சேதமடைந்த இடங்கள் மற்றும் கால்வாய்களைச் சீரமைக்கும் பணிகளுக்கு பாதுகாப்புப் படையினர், விவசாயிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது. அவ்வாறு விரைவாக சீரமைத்த பின்னர் விவசாய நடவடிக்கைகளுக்காக நீர் திறந்து விடப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்துள்ளார். (எ-இ)

## வாக்கும் சோக்கும்

ஆடான ஆடெல்லாம் குளிரெண்டு அழுதிச்சாம், சொத்தி ஆடு சோக்குத் தேடி அழுதிச்சாம் எண்டமாதிரிக் காட்சியள் தான் இப்ப உந்த அனர்த்த நேரத்திலையும் கண்ணுக்கு முன்னால நடக்குது. அதுகளைப் பாக்கிறவைக்கு பத்தியெரியுது. ஆனால் சம்பந்தப்பட்டவையே அதுகளையெல்லாம் கண்டுகொள்ளாமல் சனம் என்ன பாடும் படட்டும் நாங்கள் எங்கட சோக்கைப் பாப்பம் எண்டு சிலர் வெளிக்கிட்டிருக்கினம். அதில முக்கியமானவர் உந்த ஊசிக்காரர். அந்தாள் ஏற்கனவே வெள்ளத்துக்க வலியப்போய் மாட்டுப்பட்டு, பிறகு ஆமிக்காரர் வெளியால இழுத்துவிட்ட பிறகு 'தேசத்தின் தெய்வங்கள் தான் என்னைக் காப்பாத்தினவை' எண்டு பார்லிமெண்ட் வரை புசத்திக்கொண்டு திரிஞ்சுது. சனங்கள் எல்லாம் வீட்டுக்க வெள்ளம் வந்து தத்தளிக்கேக்கையும், மண்சரிவு வந்து சாகேக்கையும் ஆள் கொழும்பு மேல்மாடி வீட்டில இருந்து பேஸ்புக்கில லைவ் வீடியோ விட்டு, தனக்கு எதிரான ஆக்களை சண்டைக்கு வரச்சொல்லி கத்திக்கொண்டிருந்தார்.

இப்ப ஆள் வெள்ளத்துக்க,தன்ர தங்கத்தோட சேர்ந்து சோக்குக் காட்டிக்கொண்டு இருக்கிறார். வெள்ளம் வந்தபிறகு பாதிக்கப்பட்ட சனத்துக்குத்தான் வெளிநாட்டுக்காரர் காசு அனுப்பிறதால, ஊசிக்காரருக்கு அங்கையிருந்து அன்ரியாக்கள் அனுப்பிற காசு வெட்டுப்பட்டுட்டுதுபோல. அதால எப்பிடித் திரும்ப வெளிநாட்டு அன்ரியாக்களின்ர கவனத்தைத் தன்ர பக்கம் திருப்பி, காசை வறுகுறதெண்டு கொழும்பிலரும் போட்டு யோசிச்சுப் போட்டு, இப்ப தங்கத்தையும் ஏத்திக்கொண்டு மோட்டர் சைக்கிளில ஆள் லைவ் வீடியோ போடத்தொடங்கிட்டுது. இவ்வளவு நாளும் அவர் காரிலதான் சுத்திக்கொண்டு, அதிலதான் லைவ் வீடியோவும் போட்டுக்கொண்டு திரிஞ்சவர். இப்ப காரை விட்டிட்டு மோட்டர்சைக்கிளுக்கு மாறினதுதான் அவரின்ர ராஜதந்திரம். ஊசியும், தங்கமும் மோட்டர் சைக்கிளில சுத்தி,கொஞ்சிக்குலாவுற வீடியோக்களை பாக்கிறவை 'எங்க போட்டுது இவரின்ர கார்?' எண்டு யோசிப்பினம். சிலர் அவரிட்டையே கேக்கவும் செய்வினம். அந்தநேரம் பார்த்து 'என்ர காரை மக்களுக்குச் சேவை செய்யிறதுக்காக வித்திட்டன், இப்ப மக்களுக்குச் சேவை செய்ய வந்ததால காரில திரிஞ்ச நான், இப்ப மோட்டர்சைக்கிளில திரியிற நிலைமை' எண்டு ஒரு பஞ்சப்பாட்டைப் பாடினால்,திரும்ப ஆளுக்கு அன்ரியாக்களின்ர புண்ணியத்தில காசுமழை கொட்டும். அதுக்குத்தான் உந்தச் சோடிச்சுற்றுலாவாம்.

வெள்ளத்துக்க தோய்ஞ்சடிச்சு, வீடுவாசலை இழந்து, சொந்தபந்தங்களைப் பறிகுடுத்து, அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறதெண்டு சனம் ஏங்கிக்கொண்டிருக்கிற நேரத்தில, இப்பிடி 'தங்கத்தையும்' ஏத்திக்கொண்டு 'செம்மறி சொல்லடி' எண்டு செல்லம் கொஞ்சிக்கொண்டு,சேட்டை வீடியோ போடுறவர்தான் மக்கள் பிரதிநிதியாம். அவர்தான் எங்களுக்காக பார்லிமெண்டில வெட்டிமுறிச்சு வெண்டுதருவார் எண்டும் சிலதுகள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்குதுகள். பாதிக்கப்பட்ட சனத்துக்குப்போய் உதவி செய்ய வக்கில்லாட்டி, பொத்திக்கொண்டு பேசாமல் இருந்தாலாவது பரவாயில்லை. 'ஆர் செத்தால் எனக்கென்ன? நான் சோக்குப் பண்ணினால் காணும்' எண்ட வக்கிரபுத்தியைக் காட்டிறவைக்கு காலம் நல்ல பாடம் படிப்பிக்கும் கண்டியளோ. வாக்குப் போட்டு பதவிதந்த சனத்துக்கு இப்பிடி சோக்குக்காட்டி னவை நிலைச்சதில்லை.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** காரியங்கள் இழுபறியாகிமுடியும். சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிகப்படியான செலவும் அலைச்சலும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரசாங்கவகையில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது.

**கடகம்:** எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**சிம்மம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். தாயாருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். அவர் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**துலாம்:** முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடவும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஒருவழியாக அனுகூலமாக முடிந்துவிடும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** பிற்பகலுக்கு மேல் அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கணவன்–மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும் பணத்தைச் செலவு செய்யும்போது தேவையான செலவுதானா என்று யோசித்துச் செய்வது நல்லது.

**மகரம்:** சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

**கும்பம்:** கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும். உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மீனம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். ஆனால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தந்தையாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

### உதவிகளைச் சமமாகப் பகிர்ந்தளிக்க


# மக்களுக்கான நிவாரண உதவிகளை ஒருங்கிணைப்பாளரிடமே வழங்கவும்

## மன்னார் மாவட்டச் செயலகம் அறிவிப்பு

மன்னார்,டிசெ.9

**மன்னார் மாவட்டத்தில் ஒருசில கிராமங்களுக்கு இன்னும் எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் வேறு சில கிராமங்களுக்கு மிகையான உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.**

எனவே அனைவருக்கும் சமமாக உதவிகள் கிடைக்கப்பெறுவதற்கு ஏதுவாக, மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு நன்கொடையாளர்கள் உதவிகளை வழங்குமாறு மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணப் பொருள்களை ஒருங்கிணைத்து வழங்குவதற்கு, மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் அதற்கான இணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டச் செயலகத்தில் றொகன் குரூஸ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் (0770027602 023 2222235), மன்னார் நகரம் -ஜூட் மைக்கல் ராஜ் - உதவித் திட்டமிடல் பணிப்பாளர் (0770585816), மாந்தை மேற்கு-டிலைக்சன்-உதவிப் பிரதேச செயலர்( 0779949604), மடு-கிளரன்ஸ்-அபிவிருத்தி உத்தியோகத்தர் (0766949864),முசலி -இர்பான்-அனர்த்த நிவாரண உத்தியோகத்தர் (0758422870), நானாட்டான்-திருமதி மலர்விழி-நிர்வாக அலுவலர் (0776333634) ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-60)



## வெள்ளப்பிரச்சினைக்கு உடன்தீர்வு யாழ்.மாநகர முதல்வர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சங்கிலியன் தோப்பு 5ஆம் வட்டார மூத்த விநாயகர் வீதி ஆசீர்வாதப்பர் இணைப்பு வீதியின் மதகு ஊடான வெள்ளப்பிரச்சினைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மதகு ஊடாக வெள்ளம் முறையாகச் செல்ல முடியாமல் அடைபட்டுக் காணப்பட்டது. இதனால் டித்வா புயலின் போதான வெள்ளம் அந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் மற்றும் வீதிகளில் தேங்கியிருந்தது. இது தொடர்பில் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து மாநகர பொதுச்சுகாதாரப் பொறியியல் பிரிவினருக்கு முதல்வர் தெளிவுபடுத்தி உரியமுறையில் வெள்ளத்தை வெளியேற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதல்வர் பணித்திருந்தார். முதல்வரின் நேரடி அவதானத்தில் மாநகர ஊழியர்களின் உடனடி நடவடிக்கை ஊடாக, குறித்த பகுதி வெள்ளம் உடனடியாக வெளியேற்றப்பட்டது. (க-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.9

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும், வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 35, தெல்லிப்பழை மாவைகலட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும். பரஞ்சோதிமுனிவர் குருபூசையைத் தொடர்ந்து, மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரனின் 'இசைவாது வென்ற படலம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறும். (க-இ)

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.9

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 14 சந்தேகநபர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதிவரை கொழும்பு பிரதான நீதவான் நேற்று ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பிற பெண் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்காக வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஒத்திவைக்கப் பட்டது. (எ-இ)



## கணவரை அடித்துக் கொலைசெய்த மனைவி

அநுராதபுரம், டிசெ.9

அநுராதபுர மாவட்டத்திலுள்ள மிஹிந்தலை பிரதேசத்தில், குடும்பத் தகராறு காரணமாக மனைவி கணவரின் தலையில் உலக்கையால் அடித்துக் கொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 67 வயதுடைய நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். தாக்குதலில் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே இறந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (சு-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இப்போது இது அவசியமா?

இலங்கை முழுவதையும் ஆட்டிப்படைத்த 'டித்வா' பேரிடர், தேசம் முழுவதும் மீளெழமுடியாத அழிவுகளை உண்டாக்கி, இனமத பேதமின்றி மக்களைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் இழந்த மக்களை மீட்கவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவும் உள்நாட்டிலும் உலக நாடுகளிடமிருந்தும் உதவிக்கரங்கள் நீண்டபடி இருக்கின்றன. இந்த மனிதாபிமானப் பணியில், நாட்டின் பிரதான அரசியற்கட்சிகளும்,சிங்கள அரசியல்வாதிகளும் உடனடியாகக் களத்தில் இறங்கி, பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, நிவாரணப் பணிகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சமயத்தில், வெலிக்கடை, மட்டக்களப்பு, மகஸின் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பதை இந்த இடர்காலத்தில் நிரூபித்திருக்கிறார்கள். குறித்த சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் தமது ஒருநாள் மதிய உணவைத் துறந்து, அதன் மூலம் கிடைக்கும் பொருள்களைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். தாம் சிறையில் அடைபட்டிருக்கும்நிலையிலும், சக மனிதரின் துயரத்தைக் கண்டு உருகும் இந்த உணர்வு, சமூகத்தின் அடிப்படை மனித மதிப்பீடுகளை அழுத்தமாகப் பறைசாற்றுகிறது.

ஆனால், இத்தகையதொரு நெருக்கடியான, மனிதம் என்ற உணர்வு எல்லோரிடத்திலும் பெருக்கெடுக்கவேண்டிய சூழலிலும், எமது தமிழ்த்தேசிய அரசியல் தலைவர்களின் கவனம் எங்கே இருக்கிறது என்று அறிந்தால் அதிர்ச்சிதான் மிஞ்சும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் அந்தக்கட்சியின் முக்கியமான பிரமுகர்களும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்களும் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடிச் சந்தித்துள்ளனர். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கத்தான் தமக்குள் இருந்த முரண்பாடுகளை மறந்துவிட்டு, இந்த தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் ஒன்றுகூடி கலந்துரையாடியுள்ளனர் போலும் என்று எவராவது நினைத்தால்,அதைவிட முட்டாள்தனம் வேறில்லை. இந்தச் சந்திப்பின் நோக்கம், மாகாணசபைத் தேர்தல், அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இனிவரும் காலங்களில் தாம் அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வது தான் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெளிவுபடுத்தியுள்ளார். மக்கள் கொடும் துயரத்தில் மூழ்கி, உடனடி உதவிக்கு ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு தேசியப் பேரிடர் காலத்தில், தமிழ்த்தேசியத் அரசியல்வாதிகளின் பேச்சும், நடவடிக்கைகளும் இன்னமும் தேர்தல் கூட்டணி அமைப்பதையும், அரசியல் அதிகாரத்தைப் பங்கிடுவதையுமே மையமாகக் கொண்டிருக்கும் அவர்களின் நோக்கமும் மிகுந்த மனவேதனையைத் தருகின்றன.

பேரிடர் காலத்தில் மக்களுக்கு உதவுவது என்பது வெறும் கடமையோ, வாய்ப்போ அல்ல; அது எந்தவொரு மக்கள் பிரதிநிதிகளினதும் தலையாய தார்மீகப் பொறுப்பாகும். சிறைக்குள் இருக்கும் கைதிகளுக்கு இருக்கும் மனிதாபிமான உணர்வுகூடத் தமது மக்கள் துயருறும்போது இந்தத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு இல்லையா? தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்தப் பொறுப்பையும் கடமையையும் மறந்துவிட்டு, இன்னமும் தமது சுயநல அரசியல் நலன்களுக்கே முன்னுரிமை அளிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சென்று சந்திப்பதற்கோ, அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணங்களை வழங்குவதற்கோ எந்தவொரு கூட்டு முன்னெடுப்பையும் இவர்கள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. மக்கள் தம் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவது பற்றி ஆலோசிக்காமல், தமது அரசியல் எதிர்காலம் குறித்தும், தேர்தல் கூட்டணி குறித்தும் பேசஇந்தக்காலகட்டத்தை இவர்கள் தேர்ந்தெடுத்தது எவ்வகையிலும் நியாயம் இல்லை. மக்களின் துயரங்களை விடுத்து, தமது அரசியல் அதிகாரக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதில் இவர்கள் காட்டும் வேகம், தமிழ் மக்கள் மீதான இவர்களின் உண்மையான பற்றுதலின் மீதே ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பேரிடருக்கு மத்தியிலும் சுயநல அரசியலைத் தேடும் இந்தச் செயல், தமிழ் அரசியலின் திசையும், நோக்கமும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளொரு நல்வார்த்தை**

அவனவனுக்கு உரித்தானதை
அவனவனுக்கு வழங்குவது தான் நீதி.

—அரிஸ்ரோட்டில்—




## இன்று முதல் சனிக்கிழமை வரை வடக்கில் கனமழைக்கு வாய்ப்பு

**யாழ்ப்பாணம்,டிசெ.9**

**வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அருகாக உருவாகியுள்ள புதிய காற்றுச்சுழற்சி காரணமாக, இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரை நாட்டின் பல பகுதிகளிலும் கனமான மழை பெய்யக்கூடும்.**

குறிப்பாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய, தென், ஊவா, வடமேல், சப்ரகமுவ, மேல் மாகாணங்கள் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைத்து, நிலம் தன்னுடைய நிரம்பல் நிலையை எட்டியுள்ளது. எனவே, அந்தப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக 50 மில்லிமீற்றருக்கும் மேற்பட்ட மழை கிடைத்தால், வெள்ள நிலைமைகள் ஏற்படும் வாய்ப்புண்டு. எனவே தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் வெள்ள இடர் தொடர்பில் அவதானமாகவிருப்பது அவசியம். அத்துடன் மலையகத்தின் சில பகுதிகளில் நிலச்சரிவு நிகழக்கூடும். அதேவேளை வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தைச் சற்றுக் குறைவாகப் பேணுவது சிறந்தது. எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை மீளவும் ஒரு காற்றுச்சுழற்சி தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (க-66)



## மண்சரிவால் மக்கள் அச்சம்

நுவரெலியா.டிசெ.9

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், ஹற்றன் ரோதாஸ் பகுதியில் உள்ள வீட்டின் அருகே ஏற்பட்ட மண்சரிவில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. மற்றொரு வீடும் மண்சரிவு அபாயத்தில் உள்ளது. குறித்த பகுதிக்கு மண்சரிவு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த சனிக்கிழமை குறித்த வீடு சேதமடைந்துள்ளது. இதனால் ஏற்பட்ட சேதவிவரம் இன்னும் மதிப்பிடப்படவில்லை. மண்சரிவு அபாயத்தில், அந்தப் பகுதி மக்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். (க-இ)

## மின்னல் தாக்கி வீடு தீக்கிரை

கொழும்பு,டிசெ.9

மின்னல் தாக்கியதில் வீடொன்று தீக்கிரையாகியுள்ளது. பலபிட்டிய, பஹாக் மானாவத்தை, பி.ஆர். டி சில்வா மாவத்தையில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. திடீரென மின்னல் தாக்கியதில், வீட்டில் மின்சாரத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து மின்சாதனங்களும், வீட்டு உபகரணங்களும் தீக்கிரையாகியுள்ளன. சம்பவத்தின் போது வீட்டில் எவரும் இல்லாமையால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)



## பருத்தித்துறைக் கடற்கரையில் கரையொதுங்கிய வெண்நுரை

### சுனாமி அச்சத்தில் மக்கள்

பருத்தித்துறை கொட்டடிக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் திடீரென சாரை சாரையாக வெண்நுரை கரை ஒதுங்கியதால், அந்தப்பகுதி மக்கள் சுனாமி அச்சத்தில் உள்ளனர். வெள்ளை முகில்கள் கரை இறங்கியதைப் போன்று, கடற்கரை வெண்நுரைகளால் சூழ்ந்திருந்தது. இதனை மீனவர்கள், சிறுவர்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர். சில மணித்தியாலத்துக்குப் பின்னர், கடல் வழமைக்குத் திரும்பியது. 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலைத் தாக்குவதற்கு முன்னரும், இதுபோன்ற வழமைக்கு மாறான சம்பவம் கடற்கரையில் இடம்பெற்றது என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (க-100)

**நாளை** புதன்கிழமை - கார்த்திகை 24

10.12.2025

சுபநேரம் : 04.49 - 06.19

ராகுகாலம் : 12.19 - 01.49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மன்னார் மாணவர்கள் ஜோர்ஜியாவில் சாதனை

மன்னார்,டிசெ.9
UCMAS சர்வதேசமட்டப் போட்டியில், இலங்கையிலிருந்து பங்கேற்ற 58 மாணவர்களில், மன்னாரைச் சேர்ந்த நால்வர் வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றுள்ளனர். வின்சென்ட் செஷான் ஜெத்னியல் ( மன். புனித சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை), ராஜநாயகம் ரியாணா ( தோட்ட வெளி தமிழ்க்கலவன் பாடசாலை), வின்சென்ட் செகைனா தியோரா ( மன்னார் டிலாஷால் ஆங்கிலப் பாடசாலை), வின்சென்ட் செலமியா (மன்னார் டிலாசால் ஆங்கிலப் பாடசாலை) ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர். இவர்கள் நால்வரும், மன்னார் யூசி மாஸ் பயிற்சி நிலைய நிர்வாகி நடராஜா கேதீஸ்வரன் மற்றும் ஆசிரியர் யசோதா கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலில், இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். (க-56)

### தமிழீழ போராட்டக் காலத்தில்

# பாதுகாத்த இயற்கை வளங்கள் இப்போது மெல்லச் சாகின்றன

### ஐங்கரநேசன் ஆதங்கம்



**யாழ்ப்பாணம்,டிசெ.9 தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இயற்கையைப் பாதுகாத்தவாறே நகர்ந்தது.**


ஆயுதப்போராட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்த அதேநேரம் அதற்குச் சமாந்தரமாக, 'இயற்கை எனது நண்பன்' என்று சொல்லிச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக இருந்த தலைமைத்துவம் எமக்கு வாய்க்கப் பெற்றிருந்தது. ஆனால், போரின் பின்னர் அபிவிருத்தி என்ற பெயரில் எமது வளங்கள் இன்று மிகவும் மோசமாகச்
சுரண்டப்படுகின்றன. நாம் மெல்ல மெல்ல இயற்கையை விட்டு விலகிச்செல்ல ஆரம்பித்துள்ளோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார். வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானிப் போட்டி நல்லூர் திவ்ஜ ஜீவன சங்க் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறையைக் கொண்டவர்கள். இயற்கைச் சூழலை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்த மரபைக் கொண்டவர்கள். உலகின் பல கெரில்லாப் போராட்ட அமைப்புகள் இயற்கையை அழித்து தமது நிதிமூலத்தைப் பெற்றுக்கொண்ட போது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இயற்கையைப் பாதுகாத்தவாறே நகர்ந்தது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் பரம்பரையைச் சேர்ந்த நாம் மரங்களை நேசிக்கத் தொடங்கவேண்டும். அதுவே நாம் இயற்கையை நேசிப்பதற்கான, இயற்கைக்குத் திரும்புவதற்கான முதற்படி. இதை நோக்காகக் கொண்டு தான் எம்மைச் சூழவுள்ள தாவரங்களை அடையாளம் காணுகின்ற தாவராவதானிப் போட்டியை இயற்கையை நண்பனாக நேசித்த ஒரு போராட்டத் தலைவனின் பிறந்த நாளில் நாம் நடத்திவருகின்றோம். சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது பால், வயது வேறுபாடின்றி அதிக எண்ணிக்கையானோர் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்-என்றார். (க-இ)



## கந்தர்மடம் வடமேற்கில் புதிய வீதிக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.9
யாழ்ப்பாணம் மாநகரசபையின் கந்தர்மடம் வடமேற்கு இரண்டாம் வட்டாரத்தில், புதிதாக அமைக்கப்படும் வீதிக்கு அண்மையில் அடிக்கல் நடப்பட்டது. மாநகரசபையின் 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ், இந்த வீதி புனரமைக்கப்படும். வட்டாரத்தின் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்த் தலைமையில், யாழ்.மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா வீதிக்கான அடிக்கல்லை நட்டார். ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகர மராமத்துக்குழுத் தலைவர் ஜெ.மயூரன், மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி ஒப்பந்ததாரர் மற்றும் வட்டார மக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (க-இ)



## வெள்ளம் தேங்கிய பகுதிகள் துப்புரவு

மன்னார்,டிசெ.9
மன்னார் வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி ஆகிய இடங்களில், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர். அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக வெள்ளாங்குளம் பாடசாலை, தேவன் பிட்டி பாடசாலை, மூன்றாம்பிட்டி பாடசாலை, மூன்றாம்பிட்டி முன்பள்ளி ஆகியவற்றுக்குள் வெள்ளம் புகுந்து பெருமளவான மரங்களும் முறிந்து விழுந்து காணப்பட்டன. இதனையடுத்து அங்கு துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (க-55)


## புதிய சோனகத்தெரு கிராமத்துக்கு விரைவில் வடிகாலமைப்புத் திட்டம்

### மாநகர முதல்வர் உறுதி

யாழ்ப்பாணம்,டிசெ.9
யாழ்ப்பாணம் 13ஆம் வட்டாரம் புதிய சோனகத்தெரு கிராமத்தின் வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்க விரைவில், புதிய வடிகாலமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப் படும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா அந்தப் பகுதி மக்களுக்கு உறுதியளித்தார். டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு கள் தொடர்பில் நேற்றுமுன்தினம் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்ற முதல்வர், புதிய சோனகத்தெரு கிராமத்தில் முதலாம் குறுக்குத்தெரு தொடக்கம் ஒன்பதாம் குறுக்கு வரையான பகுதிகளில் வடிகால் சீரற்ற நிலைமை, வெள்ளம் வழிந்தோடமுடியாத நிலைமை, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமை தொடர்பில் குடியிருப்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"185 குடும்பங்கள் இங்கு வசிக்கின்றது. முறையான திட்டமிடல் இன்றி அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பால் வெள்ளம் முறையான ஓட்டமின்றி குடியிருப்புகளை நோக்கி வருகின்றது. வடிகாலமைப்பைத் திருத்தி, முறையான திட்டமிடலுடன் கூடிய வடிகாலமைப்பை புதிதாகச் சீரமைக்கவேண்டும்" என்று மாநகரசபை உறுப்பினர் அப்துல்லா, முதல்வரிடம் எடுத்துக்கூறினார்.

இதற்குப் பதிலளித்த முதல்வர், "கிராமத்துக்கான முறையான வடிகாலமைப்புத் தொடர்பில் மாநகர பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சகிதம் மதிப்பீடு செய்து 13ஆம் மற்றும் 11ஆம் வட்டாரங்களின் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடி, புதிய வடிகாலமைப்புத் திட்டத்தை முறையான திட்டமிடலுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதியளித்தார். (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்துக்களும்




எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடனான
கல்விச் சேவை புரிந்து
இன்று (09.12.2025) செவ்வாய்க்கிழமை ஓய்வுபெறும்
எமது மதிப்பிற்குரிய ஆசிரியர்

**திருமதி நளாயினி சிவநேசன்**
**(SLTS - 1 B.A, PGDE)**

**சேவைக்காலம்: 09.03.1990 - 09.12.2025**
**(35 வருடங்கள்)**

அவர்களது சேவையினைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் நீடூழி காலம் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

## பெயர் மாற்றம்

சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தில் வசிக்கும் சிவசுப்பிரமணியம் பாக்கியம் ஆகிய நான் எனது பெயரை சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் என மாற்றம் செய்கின்றேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்

## வேலையாட்கள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள பால்மா விநியோக நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- கணக்காளர் - பெண்கள்
- இருப்பு மேற்பார்வையாளர் - பெண்கள்

அடிப்படைக் கணனி அறிவு கட்டாயம் தேவை

சம்பளம்: 35 000 - 50 000

(CS 60124) E

தொடர்பு : 075 999 1465

## சஞ்சிகை வெளியீடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-66)

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- அலுவலக சுத்திகரிப்பாளர் ( ஆண் / பெண்)






09, 10 ஆகிய திகதிகளில் காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 01.00 வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளவும்

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## சட்ட ஆலோசகர்களை வழங்குநர்களாக பதிவு செய்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## 2026/ 2027

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்ட வாதியாக செயற்படுதல் மற்றும் சபைக்கு தேவையான சட்ட ஆலோசனையினை எழுத்து மூலம் வழங்குவதன் பொருட்டு சபையின் சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் மற்றும் அராலி உப அலுவலகங்களிற்கு தனித்தனியாக சட்டவாதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் 09.12.2025 ம் திகதியில் இருந்து 23.12.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை படிவக்கட்டணமாக ரூபா 3500.00 இனை மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக செலுத்தி படிவங்களினைப் பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரங்களினை இணைத்து 24.12.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட ஆலோசகர்களை வழங்குனர்களாக பதிவு செய்தலுக்கான விண்ணப்பம் 2026 / 2027" எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது கேள்விப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.

பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ பிரசன்னமாக அனுமதிக்கப்படுவர்.

**நிபந்தனைகள்**

1. யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்ற நியாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் அலுவலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.
2. குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவமும் மும்மொழிப் புலமையும் முன்னுரிமையாகக் கொள்ளப்படும்.
3. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகைக்கோரலைக் கோருவதற்கும் பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

தவிசாளர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

## தற்போது விற்பனையில்

**2025 இறுதிப் பரீட்சைக்கான பயிற்சிகளை உள்ளடக்கிய கையேடுகள்...!**

- தரம் 1 - குட்டிச்சுடர்
- தரம் 2 - குட்டிச்சுடர்
- தரம் 3 - புலமைச்சுடர்




- ✓தமிழ்
- ✓கணிதம்
- ✓சுற்றாடல்
- ✓ஆங்கிலம்
- ✓சைவ சமயம்
- ✓சிங்களம்
- ✓நுண்ணறிவு பயிற்சிகள்




சகல பாடங்களுக்குமான 3ஆம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் உள்ளடங்கியது

குறித்த கையேடுகள் ஊடாக உங்கள் பிள்ளைகள் குறிப்பிட்ட பாடங்களில் உயர்புள்ளிகள் பெறுவது நிச்சயம்.

முந்துங்கள்...! இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்...!

எங்கள் முகவர்களிடமும், குறிப்பிட்ட புத்தகசாலைகளிலும்.

விலை: 250/-

தொடர்பு:- 021 492 7471/72
077 656 9617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2026 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

தொகுதிகள்
தொகுதி “A” - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி “B” - சேவைகள் / வேலை
தொகுதி “C” - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்
தொகுதி “D” - உணவு வகைகள்

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுது பொருட்கள்; உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு/ ஏனையவை) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம், நிழல் பிரதியாக்கும் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | ஜன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற் வகைகள், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-09 | சுத்திகரிப்பு திரவங்கள், சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் ஏனையவை |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் பூட்ஸ், சப்பாத்துக்கள் |
| A-12 | எரிபொருட்கள் , உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள், சஞ்சிகைகள் |
| A-14 | இரும்பு பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-15 | கற்கள் மணல் வகைகள், தார் |
| A-16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம் மற்றும் ஏனைய பலகைகள் |
| A-17 | அலுமினிய பிற்றிங் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-18 | பாதணிகள், மழைக்கவசம், கையுறை, முகக்கவசம் |
| A-19 | அலங்காரப் பொருட்கள், அலுமினியப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பரிசுப் பொருட்கள், சில்வர் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள் |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |

| தொகுதி இல | வேலைகள் / சேவைகள் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழிநுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும் |
| B-02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, நிழற்படப்பிரதி இயந்திரம், கணனி விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்.) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B-06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B-07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-08 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை வழங்குதல் |
| B-09 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |
| B-10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-11 | பனர், ஸ்ரிக்கர், விளம்பரப் பலகை, லெமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள் |
| B-12 | கனரக வாகனங்கள் (JCB, Tipper, Excavator, Bulldozer etc) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல் |
| B-13 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் திருத்தம் |
| B-14 | இரும்பு, கம்பிநெற், பிற்றிங் வகைகள், அலுமினிய பிற்றிங்குகள் தொடர்பான சேவைகள் |
| B-15 | ஒப்பந்ததாரரைப் பதிவுசெய்தல் ( கட்டட நிர்மாணமும் திருத்தமும், வீதி நிர்மாணமும் திருத்தமும், கிணறு / குழாய்கிணறு அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல்) |

| தொகுதி இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு. |
| C-03 | வாகனங்களுக்கு ரயர், ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

| தொகுதி இல | உணவு வகைகள் |
|---|---|
| D-01 | உலர் உணவுப்பொருட்கள் மற்றும் அதனுடன் இணைந்த பொருட்கள் |
| D-02 | குளிர்பான வகைகள், குடிநீர் போத்தல்கள் |
| D-03 | சமைத்த உணவுகள், சிற்றுண்டிகள் மற்றும் கேக் வகைகள் |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள்/ சேவைகள் 2026 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3:00 வரை படிவக்கட்டணம் ரூ.1000.00 இனைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
3. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது ஒப்பந்ததாரரைப் பதிவு செய்வதற்கான பதிவுக்கட்டணம் ரூ.5.000.00 உம் ஏனையவற்றிற்கான பதிவுக்கட்டணம் ரூ.3.000.00 உம் செலுத்தப்பட வேண்டும்.
4. அனைத்து விண்ணப்பப்படிவங்களும் கடித உறையில் இட்டு. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2026"** எனக் குறிப்பிட்டு **தவிசாளர். நகராட்சி மன்றம். சாவகச்சேரி** எனும் முகவரிக்கு 2025.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
6. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
7. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட வியாபார தன்மையின் அடிப்படையில் தொகுதி இலக்கங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்.**
**நகராட்சி மன்றம்.**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்** 24.07.1942 — **விண்ணில்** 18.11.2016

அமரர்

## கதிர்காமு கந்தையா தியாகராசா

(ADM Secretary Cum chief clerk of chavakachcheri MPCS Ltd)

(09.12.2025 - செவ்வாய்க்கிழமை)

எந்தையாய் என்னவராய் எல்லோர்க்கும் காவலனாய்
பந்த பாசங்களுடன் பாரினில் - மைந்தருடன்
இந்த உலகினில் இன்னலின்றி வாழ்ந்து வந்தோம்
அந்த நாள் மீண்டும் வருமோ

**ஆண்டு ஒன்பதில் தர்ப்பணம் செய்து**
**ஆன்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.**

இத்தியடி பிள்ளையார் கோவிலடி
சங்கத்தானை
சாவகச்சேரி

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்

(CS 60118) E

# அகவை 67வது பிறந்தநாள் நினைவும்
# ஐந்தாம் மாத நினைவஞ்சலியும்

**தோற்றம்** 09 • 12 • 1958



**மறைவு** 01 • 07 • 2025

அமரர்


## றஞ்சிதம் நித்தியானந்தன்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

மண்ணில் கார்த்திகை பூவானாய்
விண்ணில் ஆனிவளர்பிறை சப்தமியானாய்
நானிலத்தில் ஆசிரியத்துவத்தில் வித்தகியானாய்
மனையதில் நற்துணைவியானாய்
பிள்ளைகளுக்கு நல்லன்னையானாய்
பாடசாலைகளதனில் நல்லாசிரியையானாய்
ஞாலத்தில் கடமைமுடிந்ததென,
விண்ணகம் நோக்கியதேனோ,
எது எவ்வாறாகினும் விதிவலியது என
எம்மையும் இவ்வுலகையும் மறந்தீரோ
உம் ஆன்மா இறைவனிடத்தில்
அமைதியும் சாந்தியும் அடைய பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் வாடும்**
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி**

(CS 60121) E



# புங்குடுதீவு மக்களுக்கு ரூ.4 மில்லியன் நன்கொடை




யாழ்ப்பாணம், டிசெ.9
புங்குடுதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 398 குடும்பங்களுக்கு புங்குடுதீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளால் நான்கு மில்லியன் ரூபாய் நிதியுதவி கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச செயலகத்தினரின் ஒருங்கிணைப்பில் புங்குடுதீவு பிரதேசத்திலுள்ள சகல கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்படி நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது.

நிகழ்வில் வர்த்தகர்களான கனகரத்தினம் ரகுநாதன், கலைச்செல்வன்(அப்பன் ), சுவாமிநாதன் ரகுநாதன், வசந்தன், கணேஷ் ஐங்கரன், சாவகச்சேரி கைத்தொ ழில் வணிகர்மன்றத் தலைவர் அகிலன் முத்துக்குமாரசுவாமி, சூழகம் அமைப்பின் உபதலைவர் கருணாகரன் குணாளன், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிகாரி, கிராமசேவகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41)

# கண்டாவளைக்கு நிவாரண உதவி

கிளிநொச்சி, டிசெ.9
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்புக் கிராமத்துக்கு மாவட்டச்செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட குழுவினர் களவிஜயமொன்றை கடந்த வியாழக்கிழமை மேற்கொண்டனர்.

இதன்போது கிராமத்தின் வெள்ள அனர்த்த நிலைமைகளைப் பார்வையிட்டு மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-113)



இயற்கைப் பேரிடரின் பின்னரான காலப்பகுதியில் குருதியின் தேவை அதிகரித்துள்ளமையைக் கருத்திற்கொண்டு குருதிக் கொடை முகாம் யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரியின் பழையமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என 60 பேர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ச-41-66)



கீரிமலை கடற்கரைப் பிரதேசம் மற்றும் அந்தியேட்டி நடத்தும் மடப்பகுதி என்பன சீரற்ற காலநிலை காரணமாக கழிவுகள்சூழ்ந்துகாணப்பட்ட நிலையில் வலி. வடக்குப் பிரதேசசபையினரால் கடந்த வியாழக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. (ச-17)




இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயம் சார்பில் 50 கிலோ அரிசி, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியினரிடம் ஆலய முன்றலில் வைத்து கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. (ச-41-66)






முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'துளிர் புதியதொடக்கம்' என்ற அமைப்பால் 400 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-19)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-41-66,17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உளவலுப்படுத்தல் நிகழ்வு



சாவகச்சேரி, டிசெ.9

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அலகினரால் வங்கிக் கட்டுப்பாட்டுச்சபை மற்றும் பிரதேசமட்ட அமைப்பு உறுப்பினர்களை இணைத்து உளரீதியாக வலுப்படுத்தலை ஏற்படுத்தும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. பிரதேச செயலாளர் எவ். சீ.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராகச் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் உளவளத்துணை உத்தியோகத்தர் நா.நவராஜ் கலந்து கொண்டார். (ச-41-9)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரிவில் வெள்ளநீர் புகுந்ததால் இடம்பெயர்ந்து சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியால யத்தில் தங்கியுள்ள 60 குடும்பங்களுக்கு தென்மராட்சி அபிவிருத்திச் சங்கத்தினரால் பாய், நுளம்பு வலை, படுக்கை விரிப்பு போன்றன அண்மையில் வழங்கப்பட்டன. (ச-41-9)



முல்லைத்தீவில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு மொத்தமாக 160,000ரூபா பெறுமதியான அத்தியாவசியப்பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-66)



வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட கட்டையடம்பன், இசைமலைத் தாழ்வு, முருங்கன் உள்ளிட்ட கிராம மக்களுக்கான உலருணவுப் பொருள்கள், முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் பணிப்புரைக்கமைய சமாதானத் தூதுவரும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ஷேக் அமானியால் வழங்கிவைக்கப்பட்டது. (ச-41-56)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக 'அற்புதமான இதயம்' எனும் தன்னார்வத் தொண்டு இயக்கத்தால் 50 பால்மாப் பெட்டிகள் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி ச.குணஜாவிடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன. (ச-41-9)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

### ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான சுகாதாரத் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2025.12.09 தொடக்கம் 2025.12.23 பிற்பகல் 02.30 மணி வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2025.12.24 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 2025.12.24 மு.ப 10.00 மணி

03. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

04. கேள்விதாரர் இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட திருப்திகரமான சேவையினை வழங்கியவராகவும் வலிதான வியாபார பதிவினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்வி கோரப்படும் சந்தர்ப்பத்தில் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.

05. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

06. தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை 2025.12.09 தொடக்கம் 2025.12.23 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 02.30 மணி வரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 இனை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

07. அத்துடன் கேள்விதாரர் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 25,000.00 இனைப் பணமாக அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று பற்றுச்சீட்டின் பிரதியினை கேள்விப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட்டு "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு 2025.12.24 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.

09. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

10. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பெறுகைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைவாக கேள்வியினை ஏற்றுக்கொள்ளவோ அல்லது முற்றாக நிராகரிக்கவோ முடியும்.

11. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சேவை விபரம் | சேவை தேவைப்படும் இடம் | பால் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி (ஒப்பந்த அடிப்படை) | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை | ஆண் | 10 | 01/01/2026 தொடக்கம் 31/12/2026 வரை |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

2025.12.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாளுடன் கைதானவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ. 9

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முதலி கோவில் பகுதியில், வாளுடன் கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட அந்த நபர், நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போதே, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-27)

### நேர்மையுடன்...

முறை பற்றிய சுற்றறிக்கை தொடர்பில், ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட வெளிவாரி உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள் பலர் உட்பட பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் செயலாளர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

புள்ளியிடலில் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையிலேயே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம் என்று யாழ். பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த பலரும் சந்தேகம் வெளியிட்டிருந்த நிலையில், வழமை போலத் துணைவேந்தர் தெரிவினை எதிர்நோக்கும் ஏனைய பல்கலைக்கழகங்களின் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பு போன்றதே இந்தச் சந்திப்பு என்று ஆணைக்குழுவட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய சந்திப்பின் போது, துணைவேந்தர் தெரிவு தொடர்பாகச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், தெரிவுச் செயன்முறையின் போது உண்மைத் தன்மையையும், நேர்மைத் தன்மையையும் பிரதிபலிக்குமாறு சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்ட வழிப்படுத்தல்களை கவனத்திற்கொண்டு புள்ளியிடல் மற்றும் மற்றைய செயன்முறைகளை செய்யுமாறும் பேரவை உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தெரிவின்போது பின்பற்றப்பட வேண்டிய சில நடைமுறைகள் குறித்துப் பேரவை உறுப்பினர்களும் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

உள்வாரிப் பேரவை உறுப்பினர் ஒருவரால் சர்ச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பீடாதிபதி நியமனம் குறித்தும், அந்தப் பீடாதிபதியின் மதிப்பீட்டு உரிமை தொடர்பிலும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பிரச்சினையை அந்தப் பல்கலைக்கழகமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெளிவுபடுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது. (அ-ம-26)

### பட்ஜெட்...

24ஆம் திகதி தோற்கடிக்கப்பட்ட நிலையில் குறித்த பட்ஜெட்டை மீண்டும் சபையில் நிறைவேற்றுவதற்கான விசேட அமர்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிலையிலேயே இரண்டாவது தடவையாகவும் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 5 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் பதிவாகின. மேலதிகமாக மூன்று வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. (அ-ம-27)

### யாழ்.மாவட்டச்...

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அகிலனை நேற்றுச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் நாங்கள் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். எனினும், இதுவரை காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துமீறிய மீன்பிடி காரணமாக எமது வலைகள் அழிக்கப்படுகின்றன. நாங்கள் வாழ்வாதாரத்தை இழப்பதுடன், எமது பொருளாதாரம் பின்னடைவு நிலைக்குள் தள்ளப்பட்டு வருகின்றது. எனவே இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாமே கடலில் இறங்கி அவர்களுக்கு எதிராகப் போராடுவோம். இதன் முதற்கட்டமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில், நீரியல் வளத் திணைக்களத்தின் முன்னிருந்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்து மாவட்டச் செயலகம் வரை பேரணியாகச் செல்லவுள்ளோம். அங்கு மாவட்டச்செயலகத்தின் வாயிலை மூடி எமது போராட்டம் இடம்பெறும் - என்றனர். (அ-ம-26-66)

### நிவாரணப்...

தில் நேற்றுத் தரையிறங்கியது. குறித்த நிவாரணப் பொதிகள் அமெரிக்க இராணுவத்தால் இலங்கை விமானப் படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. அவற்றில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான நிவாரணப் பொதிகள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26-66)

### கடலட்டைப்...

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இரணைதீவு கடலட்டைப் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இரணைதீவில் 103 கடலட்டைப் பண்ணையாளர்கள் 125 ஏக்கரில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தோம். அண்ணளவாக நான்கு இலட்சம் கடலட்டைகள் வளர்க்கப்பட்டன. தற்போது ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக நான்கு இலட்சம் கடலட்டைகளும் இறந்துவிட்டன. அவற்றின் பெறுமதி அண்ணளவாக 160 மில்லியன் ரூபா.

அத்தோடு, நான்கு படகுகள், எட்டு வள்ளங்கள், 10 குடிசைகள், 200 அட்டைப் பண்ணை வலைகள், 450 நண்டு வலைகள், 150 பட்டி வலைகள் என்பனவும் அழிவடைந்துள்ளன. எனவே, எமக்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான அழிவுகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும் - என்றனர். (அ-ம-113)

### 25,000 ரூபா...

பகுதிகள் பேரழிவு என்னும் வகைக்குள் உள்ளாகவில்லை. வருடாந்த பருவகால மழையால் ஏற்படும் பாதிப்புக்கு ஒத்த பாதிப்பாகவே அது அமைந்திருந்தது. எமது பிரிவுகளைச் சேர்ந்த சிலர் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த போதிலும், அவர்கள் மீளக்குடியமர்ந்த போது பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கவில்லை. அத்துடன் நிதிச்செலவுகளும் ஏற்படவில்லை. டித்வா பேரிடரால் எமது பகுதிகளில் மக்களில் எவரும் இறக்கவோ, காயப்படவோ, காணாமற்போகவோ இல்லை. ஆதலால், வீடுகளைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 25 ஆயிரம் ரூபா நிதிக்கு நாம் சிபாரிசு செய்யவேண்டிய தேவை எழவில்லை - என்றுள்ளது. (அ-ம-26)

### மீன்பிடிக்கச்...

யாழ்ப்பாணம் - மாதகல் குளமொன்றில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற இளைஞர், குளத்தில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த வாமதேவன் கோகுலதேவன் (வயது-33) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### உள்ளக...

டன. எனினும், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தொடர்ந்து, அந்த விளையாட்டு அரங்கை அமைக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இதையடுத்தே, பழைய பூங்கா பகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சென். பொஸ்கோ ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக கூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக பழைய பூங்காவுக்குச் சென்று அந்தப் பகுதியைப் பார்வையிட்டனர். இதையடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று மாவட்டச் செயலிடம் மனுவொன்றையும் கையளித்துள்ளனர். (அ-ம-26)

### யாழ்ப்பாணப்...

பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சி.ரகுராம் (கலைப்பீடப் பீடாதிபதி), பேராசிரியர் தி.வேல்நம்பி (உயர் பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி), பேராசிரியர் ஆர்.சுரேந்திரகுமாரன் (மருத்துவபீடப் பீடாதிபதி), பேராசிரியர் பு.ரவிராஜன் (விஞ்ஞான பீடப் பீடாதிபதி), பேராசிரியர் கு.மிகுந்தன் (விவசாய பீட முன்னாள் பீடாதிபதி), பேராசிரியர் ஜெ. பிறின்ஸ் ஜெயதேவன் (விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதி) உள்ளிட்டோர் இம்முறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புதிய துணைவேந்தர் பதவிக்காகப் போட்டியிடவுள்ளனர்.

இவர்களில் பேரவையால் பரிந்துரைக்கப்படும் மூவரில் ஒருவர், ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

### இந்தியா -...

பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டித்வா சூறாவளியால் இலங்கைக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. 8 பில்லியன் டொலருக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த இழப்பை இலங்கையால் தனித்து ஈடுசெய்ய முடியாது.

எனவே, இந்தியா, சீனா, ஜப்பான், ஐக்கிய அரபு அமீகரம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் இணைத்தலைமையின் கீழ் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்த வேண்டும். உலகில் வேறு நாடொன்றில் அனர்த்தம் ஏற்பட்டு, உலகின் பார்வை அந்த நாட்டின் பக்கம் திரும்புவதற்கு முன்னர் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளின் மாநாட்டையும் நடத்த வேண்டும் - என்றார். (அ-ம-44)

### பதில்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று அவர் பதவியேற்றார். பதில் பிரதம நீதியரசராக பதவியேற்றுள்ள யசந்த கோத்தகொட , குடியுரிமை வழக்கில் கோத்தாபயவுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் குழாமில் அங்கம் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### மாநகரசபை...

கப் பிடிக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாந கரசபைக்கு உட்பட்ட கந்தபுராண வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சங்குக் கூட்டணியைப் பிரதிநிதித்துவம் செய்து, யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினராக இருக்கும் நபரே இவ்வாறு பொது இடத்தில் குப்பை கொட்டும்போது மக்களால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவராவார். பின்னர், அவரைக் கடுமையாக எச்சரித்த மக்கள், அவர் கொட்டிய குப்பைகளை அவரே அள்ளிச்செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டனர். யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினராக இருந்துகொண்டு பொதுவிடத்தில் குப்பைகொட்டிய அந்த நபரின் செயற்பாட்டுக்குப் பலரும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய ஒன்றியம் வேண்டாம்!

ஐரோப்பிய ஒன்றியம் ஒழிக்கப்பட வேண்டும் என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின், 'டிஜிட்டல் சேவைகள் சட்டத்தை' மீறியதாக எலான் மஸ்க்கின் எக்ஸ் தளத்துக்கு 140 மில்லியன் டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே அவர் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார். (ம)

## காணி விற்பனை

ஊரெழு மேற்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு அருகாமை.
- 24 அடிப்பாதை.
- ஊரெழு பிள்ளையார் கோயிலடியில் இருந்து 2km தூரம்.
- விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**0740 188 731**
**075 41 29 203**

(CS 30891)A

## பணியாளர்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பணியாளர் தேவை**

**வரவேற்பாளர் - ஆண்கள் (இரவு நேர கடமை)**

09, 10 ஆகிய திகதிகளில் காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 01.00 வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளவும்



உதயன்

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

## வேலை ஆட்கள் தேவை

இலக்கம் 194 யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு பெண்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு

**076 640 3388**

(CS/30889) J-1

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாண நகரில் இயங்கும் முன்னணி நிறுவனத்திற்கு வரவேற்பாளர் மற்றும் Data Entry Operators தேவை. Bio data-ஐ WhatsApp செய்யவும்.

தொடர்புகளுக்கு 707228685

## காணவில்லை

நேற்று (08.12.2025) யாழ் நல்லூர் - நாவலர் வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் NP BII 3363 எனும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:- **077 120 3751**

## தேவை

- கூலியாட்கள் தேவை.
- யாழ். நகரில் களஞ்சியசாலை (Store) தேவை.
- அனுபவம் உள்ள காசாளர் (Cashier) தேவை.

தொடர்பு: **077 25 43 569**
**021 222 8367**

(CS 30894) A

## TUITION CLASSES

Zoom மூலமும் அல்லது தனியாகவும் அல்லது குழுவாகவும் வீடுவந்து கற்பிக்கப்படும்.

- English for All
- Mathematics
- Science

**T.P- 077 331 4608**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km


தொடர்பு:- **076 860 2770**
**076 987 8617**

(CS 30852) A

# மரண அறிவித்தல்

## நடராசா யோகராசா

**(முன்னாள் வாரியப்பளை புகையிலை வியாபாரி)**



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 6ம் வட்டாரம் மண்டைதீவை வாழ்விடமாகவும், கலாசாலை வீதி, கோண்டாவிலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நடராசா யோகராசா (முன்னாள் வாரியப்பளை புகையிலை வியாபாரி) அவர்கள் கடந்த (05.12.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா நாகபூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், சதீஸ்குமார் (பிரான்ஸ்), சர்மிளா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதினி, சாந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், சகானா, சயிலன், சயானா, அகரன் ஆகியோரின் அன்பு பேரனும், பரமேஸ்வரி, காலஞ் சென்றவர்களான சிவஞானம், சரஸ்வதி, தேவராசா, சிவபாக்கிய லட்சுமி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சந்திரலிங்கம், சண்முகலிங்கம், விஜயராணி, சொர்ணலிங்கம், கிருபானந்தலிங்கம், சந்திரராணி மற்றும் வில்வராணி, விமலாதேவி, நாகேஸ்வரி, நாகராணி, சந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலாசாலை வீதி, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கலாசாலை வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 911 6333, 077 447 1075**

(CS/60122) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org